




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஜனவரி - 24.01.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்











## தமிழக நிகழ்வுகள்

- இந்தியாவிலேயே முதன்முறையாக, தமிழகத்தில் அரசு பள்ளிகளில் **எல்கேஜி, யுகேஜி** வகுப்புகள் தமிழக முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
    - **முதற்கட்டமாக,** சென்னை **எழும்பூரில்** செயல்படும் **மாநில மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளியில்** எல்கேஜி, யுகேஜி வகுப்புகள் தொடங்கப்பட்டது.

## இந்திய நிகழ்வுகள்

- **ஜி.எஸ்.டி அமலாக்கத்திற்கு பிறகு மாநிலங்கள் எதிர்கொள்ளும் வருவாய் பற்றாக்குறையை** ஆய்வு செய்வதற்காக, பீகார் துணை முதல்வரான **"சுஷில் மோடி"** தலைமையில் ஏழு பேர் கொண்ட குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.
    - யூனியன் பிரதேசங்களில் **புதுச்சேரியானது** அதிகபட்சமாக **43%,** பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது.

- உத்திரப் பிரதேச மாநிலம் வாரணாசியில் **15வது வெளிநாடு வாழ் இந்தியர்கள் தின மாநாட்டை** (பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடு) பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
    - இம்மாநாட்டின் கருத்துரு: **"புதிய இந்தியாவை உருவாக்குவதில் வெளிநாடு வாழ் இந்தியர்களின் பங்கு"** என்பதாகும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **2020ல்** நடைபெறும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய தலைவராக, **பிரேந்திர பிரசாத் பைஷ்யா**(இந்திய பளுதூக்குதல் கூட்டமைப்பின் தலைவர்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
    - ஒலிம்பிக் போட்டிக்கான **இந்தியத் தலைவர் கௌரவமானது, முதன்முறையாக பளுதூக்கும் அணிக்கு** வழங்கப்பட்டுள்ளது.

- **மலேசியாவில்** நடைபெற்ற குழந்தைகளுக்கான **உலக கோல்ஃப் சாம்பியன் ஷிப் போட்டியில் 8 வயதிற்குட்பட்டோர் பிரிவில்** இந்தியாவின் **"கார்த்திக் சிங்"** சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
    - இதன் மூலம், உலக பட்டத்தினை வென்ற இளவயது

இந்தியர் என்ற பெருமையை “கார்த்திக் சிங்” பெற்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **கைத்தறி நெசவாளர்களுக்கு** உதவுவதற்காக மைக்ரோசாப்ட் இந்தியாவானது, அதன் **ரீவேவ்** (re-weave) திட்டத்தின் கீழ், **re-weave.in** என்ற மின்னனு வர்த்தக தளத்தை தொடங்கியுள்ளது.
    - ரீவேவ் திட்டமானது மைக்ரோசாப்ட் இந்தியா நிறுவனத்தால், மக்கள் சேவை முயற்சியின் ஒரு பகுதியாக 2016ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

## விருதுகள்

- இந்தியப் பெண்களின் ஆக்கப் பூர்வமான எழுத்துக்களை அங்கீகரிப்பதும் ஊக்குவிப்பதுமே நோக்கமாகக் கொண்ட, **மகளிருக்கான குரல் விருதானது**, அபீஜெய் கொல்கத்தா இலக்கிய திருவிழாவில், அமெரிக்காவில் உள்ள இந்திய கவிஞரான **“ரஞ்சனா முரளிக்கு”** வழங்கப்பட்டுள்ளது.
    - இவரின் இரண்டாவது புத்தகமான **“Clearly you are ESL”** என்ற புத்தகம் **சிறந்த இந்திய கவிதை சேகரிப்பு** என்ற விருதை வென்றுள்ளது.
- குறிப்பு:
    - இவரின் முதல் புத்தகம் **“பார்வையற்ற திசைகள்”** என்பதாகும்.

## முக்கிய தினங்கள்

- **47வது மாநில தினம் - ஜனவரி 21.**
    - **மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்கள்** தங்கள் **47வது மாநில தினத்தை 21 ஜனவரி(2019)** கொண்டாடின. **1972ம்** ஆண்டில், வடகிழக்குப் பிராந்திய மறுசீரமைப்பு சட்டம் **1971-ன்** படி ஜனவரி 21ம் தேதி இம்மூன்று மாநிலங்களும் முழுமையான மாநிலங்களாக மாறின.
- குறிப்பு:
    - சுதேச அரசுகளான திரிபுரா மற்றும் மணிப்பூர் ஆகியவை **1949ம்** ஆண்டு இந்தியாவுடன் இணைந்தது குறிப்பிடத்தக்கது.